## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 24 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான 55 காணிகளின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | காணிகளின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 03 வாகனங்களிற்கு பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் சொத்துகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காணப்படுகின்றது. | பதில் வழங்கப்படவில்லை. | வாகனங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (iii) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நூலகப் புத்தகங்களின் பெறுமதிக்குள் 52 எண்ணிக்கையான நூலகப் புத்தகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் பௌதீக ரீதியாக காணப்படாமையால் சொத்தின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | நூலகப்புத்தகங்கள் தொடர்பாக உரிய பெறுமதி கணிப்பிடப்பட்டு சரியான பெறுமதியே நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |
| (iv) | 2019 ஆம் சபை நிதி மூலம் ரூபா 2,974,830 செலவில் மேற்கொள்ளப்பட்ட ஆவளை இந்துமயான உட்கட்டுமான வேலை தொடர்பான செலவினம், மூலதனச் செலவினமாக காணப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்காமையினால் குறித்த தொகையினால் சொத்துக்களின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது | வேலைகள் நிறைவு பெற்றதும் முழுமையான சொத்தாக காட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | குறிப்பிட்ட மூலதன செலவினத்தினை சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய சட்டத்திற்கமைய செயலாற்றல் அறிக்கையை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் | | | |
| | பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை ரூபா 526,081 செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு பற்றாணைச்சீட்டுக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆதனவரி நிலுவை தொடர்பாக பிரதேச சபை சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | இலக்கம் 371 | சபையினால் வழங்கப்பட்ட ரூபா 289,104 ஆன முற்பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முற்பணம் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | இலக்கம் 571 | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 654,720 ஆன வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் | | | |
| | 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | நிர்வாக ரீதியாக பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப பட்டிருந்த 06 உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் ரூபா 60,000 செலுத்தப்பட்டிருக்கவில்லை | பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஊழியர் பிணைப்பணம் தொடர்பாக வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(உ) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2018.01.24 ஆம் திகதிய இல 05/2018 (1) ஐ கொண்ட சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய இல 05/2008 | பிரசைகள்/பயனாளிகள் சமவாயத்திற்கு ஏற்புடையதாக பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டிக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | பணியாளருக்கு ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது | ஊழியர் பயிற்சி வழங்கல் தொடர்பாக சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 10 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு உரிய காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஊ) ஏனைய சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| | 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி - 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கு அமைய இணைய சேவை உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விற்பனைவரி தொடர்பாக பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,326,758 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,440,057 தொகையாக இருந்தது இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 7,113,299 ஆல் குறைவடைந்துள்ளது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 112,000 | 103,269 | 526,081 | 98,100 | 226,795 | 519,328 |
| வாடகைகள் | 4,491,400 | 5,745,414 | 17,200 | 10,326,600 | 11,620,300 | 519,328 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,060,200 | 2,727,927 | - | 1,620,300 | 2,134,165 | - |
| ஏனைய வருமானம் | 113,678,596 | 121,345,550 | 52,418,844 | 9,6030,400 | 71,992,688 | 54,725,578 |
| | 120,342,196 | 129,922,160 | 52,962,125 | 108,075,400 | 86,066,991 | 55,275,256 |

### 2.2.2 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆதனவரி நிலுவையான ரூபா 526,081 இனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | ஆதனங்களின் வீதவரி நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.3. நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,197,427 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பண நிலுவையினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,883,307 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முத்திரைக் கட்டண நிலுவையினை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உப விதிகள் அனைத்தும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உபவிதிகள் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்த சபைக்குரிய உப விதிகளின் பிரகாரம் உரிய காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 19 செயற்பாடுகளில் 17 செயற்பாடுகளுக்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டினூடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால்ரூபா 2,000,000 பெறுமதியான 02 செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது. | அபிவிருத்தி ஒதுக்க நிதியினை பயன்படுத்தி வேலை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வரவு செலவுத்திட்டத்திற்கு ஏற்றவாறு செயல் நடவடிக்கைத்திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு நிதியாண்டில் செயற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்பாட்டின் செயலாற்றலினை ஆரம்பிப்பதற்கு ரூபா 10,262,245 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்ளாது அந்த செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தது. | செயற்பட வைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது உரிய திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய விளைவுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(உ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகனத்தரிப்பிடம் மற்றும் தலைமையலுவலகம் அமைத்தல் செயற்பாடு உரிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | குறிப்பிட்ட செயற்பாடுகளை உரியகாலத்தில் நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுகிறது. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திண்மக்கழிவுகளை அகற்றும் போது தரம் பிரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(எ) சுற்றுச்சுழல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசுக்கள் பரவுவதைத் தடுப்பதற்கும் துர்நாற்றத்தை தடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | துர்நாற்றத்தை தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு உழவு இயந்திரம் கடந்த 03 வருடங்களாக உரிய தேவைக்கு பயன்படுத்துவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களை உரிய காலப்பகுதியில் திருத்தம் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இரு உப அலுவலகங்களுக்குரிய ஆதனங்கள் மீள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் ஆதன வரி பதிவேட்டினை பராமரிப்பதற்கு நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆதனங்களை மீள மதிப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஆதனவரி பதிவேடுகள் உரிய முறையில் பராமரிக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 07 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் யாவும் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைப் பணிப்பாளரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் வெற்றிடம் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான JCB, Motar Grader என்பவற்றின் வருமானத்தினை ஈட்டுவதற்காக பயன்படுத்திய போதும், அவற்றின் மூலம் பெற்றக்கொண்ட வருமானம் ரூபா 599,862 ஆக இருந்த போதிலும் செலவினம் ரூபா 945,007 ஆகவும் காணப்பட்டதனால் வருமானத்திலும் விட செலவினம் அதிகமாக காணப்பட்டதனால் ரூபா 345,745 நட்டம் ஏற்பட்டுள்ளது. | அதியுயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த பிரதேசங்களை துப்பரவு செய்வதற்கு இச்செலவீனங்கள் ஏற்பட்டிருந்தது. | சபைக்குரிய சொத்துக்களை சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு பயன்படுத்துவதன் மூலம் போதிய வருமானத்தினை ஈட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 31,091,360 ஆன 08 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் சபையின் வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,026,040 ஆன மோட்டார் வாகனத்தினை சபைக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | உரிய காலத்தில் சபையின் வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ரூபா 47,478,732 பெறுமதியான காணி கட்டடங்களின் உரிமையினை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் மற்றும் சான்றுகள் உரிய வகையில் பெறப்பட்டு வருகின்றது. | காணி கட்டடங்களின் உரிமையினை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.2 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| EP JS – 7993 பதிவு இலக்கமுடைய பவுசரும், இன்னொரு பதிவு இலக்கமற்ற பவுசரும் உக்கி பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன. | பவுசருக்கு பதிவு இலக்கம் இல்லாத காரணத்தினால் ஏலவிற்பனை மேற்கொள்ள முடியாதுள்ளது. | வாகனங்களை உரியவாறு பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படவேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீண்டுவரும் செலவினத்தின் பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவதனால் இது செலவின பாதீட்டின் வினைத்திறனற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது. | பதில் வழங்கப்படவில்லை. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |